# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தளத்தின் 10வது கூட்டம் 15-11-2009 அன்று ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் 6:15 மணிக்கு பங்குத் தந்தையின் ஆரம்ப செபத்துடன் ஆரம்பமானது. அன்றைய கூட்டத்திற்கு அருட்சகோதரி கார்மேல் யோண்பிள்ளை, திரு. அம்புறோஸ், திரு. சார்ள்ஸ், திரு. ஜீவன், திரு. அமிர்தநாதர், மற்றும் திரு விஜயக்குமார், ஆகியோர் சமூகம் தரவில்லை. திரு விஜயக்குமார் அவர்களுக்குப் பதிலாக திரு. வெனாசியஸ் அவர்கள் சமூகம் தந்திருந்தார். அத்தோடு இவ்வாறு ஒருவருக்குப் பதிலாக இன்னொருவர் வருவதைவிட தொடர்ச்சியாக ஒருவர் வருவது நல்லது என்றும் பங்குப் தந்தை கூறினார். கடந்த மாதக் கூட்டறிக்கை செயலாளரால் வாசிக்கப்பட்டது. அறிக்கையில் சில திருத்தங்கள் செய்யப்பட்ட பின்னர், திரு. தேவதாஸ் அவர்கள் முன்மொழிய, திரு. யூலியன் அவர்களால் வழிமொழியப்பட்டு கூட்டறிக்கை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், ஆலய நிர்வாகம், கலண்டரில் போடப்பட்ட திட்டங்கள் அனைத்தும் இந்த ஆண்டில் என்னென்ன செய்ய இருந்ததோ அவற்றைச் செய்தோம் என்றும், அத்தோடு அடுத்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுபற்றி பங்குச் சபையும், நிர்வாக சபையும் சேர்ந்த ஒரு ஒன்றுகூடல் கூட்டம் மார்கழி மாதம் 2வது ஞாயிற்றுக்கிழமை வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், கலண்டர் அச்சிடும் விடயம் சம்பந்தமாக கருத்துகள் பரிமாறுகையில், இங்கு அச்சிடுவது என்றால் அதிக செலவு ஏற்படும் என்றும், அதனை இந்தியாவில் செய்வதாயின் செலவு குறைவாக இருக்கும் என்றும், வழிபாட்டுக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட போது திரு. வினிபிரட் அவர்கள் ரொறன்ரோவில் தான் கலண்டர் செய்து தருவதாகக் கூறியதாகவும் பங்குத்தந்தை தெரிவித்தார். மேலும், பெரியவர்கள் (60 வயதிற்கு மேற்பட்டவர்கள் ) விடயம்பற்றிக் கலந்துரையாடுகையில், திருமதி கலிஸ்ரா அவர்களின் வேண்டு கோளிற்கிணங்க 22-11-2009 ஞாயிற்றுக்கிழமை அன்று காலைத் திருப்பலியின்பின் அவர்களுக்கான ஒன்று கூடல் கூட்டம் ஒன்று வைக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அவர்களுக்குரிய போக்குவரத்து வசதிகள் ஒரு பிரச்சனையாக இருப்பதனால், பங்குத்தந்தை உபயோகப்படுத்தும் வாகனத்தை நம் பங்கின் பெயருக்கு மாற்றினால் வசதியாக இருக்குமென்றும், பெரியோர்களின் ஒன்றுகூடலை ஒருங்கமைப்பவர்கள் முதலுதவிப் பயிற்சி பெற்றிருப்பது நல்லது என்றும் பங்குத்தந்தை கூறினார்.

மேலும், ஒளிவிழாவுக்கான மண்டபம் பற்றிக் கலந்துரையாடுகையில், விடுமுறை காரணமாக பாடசாலை மண்டபங்களை மார்கழி 18ம் திகதிக்குப்பின் வாடகைக்கு எடுப்பது கடினம் என்றும், எமது நாட்டில் தொடர்ந்தும் மக்கள் பாதிப்புக்குள்ளாகி வருவதன்காரணமாக ஆடம்பரச் செலவீனத்தைக் குறைக்கவும், எமது பங்குச் சிறுவர்களின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு ஒளிவிழாவை எமது ஆலய மண்டபத்திலேயே நடாத்துவது நல்லது என்றும் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

மேலும், பங்குச்சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களையும் வழிபாட்டுக்குழுவே முன்னின்று செய்யும் என்றும் திரு. அலெக்ஸ் அவர்கள் கூறியிருந்தார். மற்றும் திருநாள் திருப்பலியோ, அல்லது ஏனைய திருப்பலியிலோ பங்குமக்களிடம் வாசகங்கள் கொடுக்கின்ற போது, அவர்களில் பலர் திருப்பலிக்குத் தாமதமாகி வருவது, போன்ற நடைமுறைச்சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே, அதனை பங்கு மக்களுக்குத் தெரியப்படுத்து முகமாக அறிவித்தல் வழங்குவது நல்லது என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. மேலும், திருவிருந்து வேளையில், மக்களை வரிசையில் ஒழுங்குபடுத்துவதை இன்னும் சிறப்பாகச் செய்யவேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. எமது மறைத்தள அன்னையின் பெருவிழா மட்டும் 9 நவநாட்களுடன் நடைபெறுமென்றும், ஏனைய புனிதர்களின் திருநாட்கள் 3 நாட்கள் ஆயத்த வழிபாடுகளுடன் நடைபெறும் என்றும் பங்குத்தந்தை கூறினார்.

அடுத்த ஆண்டு தயாரிக்கப்பட இருக்கின்ற கலண்டரில் போடவேண்டிய ஏனைய விடயங்கள் ஏதும் இருப்பின் கூறும்படி பங்குத்தந்தை கூறினார். அதற்குத் திருமதி கலிஸ்ரா, பெரியவர்களின் ஒன்றுகூடல், பற்றிய நிகழ்வுகள் போட முடிந்தால் நல்லது என்றும் மேலும், சமூகநலப்பணியில் வேறுயாராவது இணைய விரும்பினால் தன்னுடன் தொடர்புகொள்ளும்படியும் கூறினார். மேலும் snow removal பற்றி திரு. றொபின் அவர்கள் விசாரித்து அது பற்றிய விபரங்களைச் சமர்ப்பிப்பதாக கூறினார்.

இறுதியாக, திரு. அல்பிரட் அவர்களின் இறுதிச்செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

அருட்.தந்தை அன்றூ தவராஜசிங்கம்
பங்குத்தந்தை
மீட்பின் அன்னை மறைத்தளம்

திரு.நெல்சன் ஆரோக்கியநாதன்
செயலாளர் (பங்குச்சபை)
மீட்பின் அன்னை மறைத்தளம்